Judicial Form No. 53
(See Rule 42 of CRP)
DEPOSITION OF WITNESS.
(Chapter XXIII, Cr.P.C.)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II, SRIVILLIPUTTUR
CC NO.723/2022

**Depositions of PW- 3**

| | | | |
|---|---|---|---|
| Name | திரு.அப்பையநாயக்கர் | Occupation | விவசாயம் |
| Father's name | அப்பையநாயக்கர் | Calling | |
| Village | கம்மாபட்டி | Religion | |
| Taluk | ராஜபாளையம் | Age. | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 07th day of October 2025.

07.10.2025

எதிரிகள் ஆஜர் .

முதல் விசாரணை

நான் தற்போது கம்மாபட்டியில் குடியிருந்து வருகிறேன். நான் விவசாயம் செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியாது. கடந்த 8 வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் வயலில் தண்ணீர் பாய்ச்சிகொண்டிருந்தேன். போலீசார் வந்து என்னை பிடித்துக்கொண்டனர். அதன் பின்பு ஒரு தாளில் கைரேகை வைக்குமாறு கூறினார்கள். போலீசார் என்னை விசாரித்தனர். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரிலுள்ள கைரேகை என்னுடையதுதான். **பார்வை மகஜரிலுள்ள 2வது கைரேகை மட்டும் அ.சா.ஆ 5 ஆக குறியீடு செய்யப்படுகிறது**.

**சாட்சியை பிறழ் சாட்சியாக பாவிக்கக்கோரி அரசு தரப்பில் அனுமதி கேட்டதன் பேரில் அனுமதிக்கப்பட்டு சாட்சி அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்பட்டார்.**

அரசுத்தரப்பில் குறுக்கு விசாரணை–

கடந்த 25.11.2017 அன்று நானும், சின்னசிந்தாளும் முங்கரையா என்பவருக்கு சொந்தமான தோப்பில் வேலை செய்துகொண்டிருந்தபோது அங்கு வந்த மம்சாபுரம் காவல்நிலைய சார்பு ஆய்வாளர் மேற்படி காவல்நிலைய குற்ற எண்.276/2017 பிரிவுகள்

379 இதச உ/இ 21(1) Mines and Minerals Act 1957 வழக்கின் சம்பவயிடத்தை எங்கள் முன்னிலையில் பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் வரைபடம் தயார் செய்ததாகவும் அதில் நாங்கள் சாட்சிகளாக கையெழுத்து செய்ததாகவும், போலீசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது உண்மையை மறைத்து பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>–இல்லை.**

சாட்சி சொல்ல சொல்ல என்னால் சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிகளிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

நீதித்துறை நடுவர் எண்.2,
திருவில்லிப்புத்தூர்.